**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.15
https://ngmtamil.in/

# ஆற்றுப்படைப் பாடல்களில் கலைஞர்களின் வாழ்வியல்

**திருமதி.ரா.ஐஸ்வர்யா**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பாரதியார் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
ஆத்தூர்(சேலம்)
**முனைவர் மு.பெரியசாமி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, கந்தசாமிக் கண்டர் கல்லூரி(சுயநிதி),
வேலூர்(நாமக்கல்)

**முன்னுரை**

ஆதிமனிதன் காட்டுமிராண்டியாக வாழ்ந்த காலத்தில் தங்கிக்கொள்ள உறைவிடமும் உடுக்க உடையும் உண்ண உணவும் உண்டாக்கிக் கொள்ளத் தெரியாமல் விலங்கு போல அலைந்துத் திரிந்தான். பிறகு மெல்ல மெல்ல நாகரிகம் அடையத் தொடங்கி வசிக்க வீடும் உடுக்க உடையும் உண்ண உணவும் உண்டாக்கிக் கொள்ளக் கற்றுக்கொண்டான். இதனால் அவன் மிருக வாழ்க்கையிலிருந்து விலகி நாகரீக வாழ்க்கை அடைந்தான். மனிதன் நாகரிகம் பெறுவதற்கு பேருதவியாக இருந்தவை அவன் சிறிது சிறிதாகக் கற்றுக்கொண்ட பலவகையான தொழில்களேயாகும். மனிதன் தன் வாழ்க்கைக்கு பயன்படுத்துகிற எல்லாத் தொழில்களும் கலைகளே. அத்தகைய கலைகள் அறுபத்தி நான்கு. அத்தனைக் கலைகளும் அழகுதான். அழகுபெறும் கலைகளுள் ஒன்று நுண்கலையான காவியக் கலை. சமூகத்திலிருந்து உருவாகும் கலைஞன் தன் படைப்பிலும் சமூகத்தைப் பிரதிபலிக்கிறான் என்பதுதான் உண்மை. அவ்வகையில் பத்துப் பாட்டு பாடல்களில காணப்படும் கலைஞர்களான பாணர், கூத்தர்களின போன்றோரின் வாழ்வியலை இக்கட்டுரை ஆராய்கிறது.

**கலைஞரின் மரபுகள்**

கலைஞர்கள் காட்டிலுறையும் தெய்வத்தை வழிபடும்முறை, கோவிலில் வழிபடும் முறை, நடுகல் வழிபாட்டுமுறை, அரசனைக் கண்டால் நடந்து கொள்ள வேண்டிய முறை என்று பல முறைகளைக் கடைபிடித்து வந்தனர். விறலி அரசனைக் கண்டால் நடந்து கொள்ள வேண்டிய முறைகளை அறிந்தவள். முதலில் பழைய மரபுப்படி பாடுவாள். அதாவது கலைஞர்களுக்கு வகுத்த இலக்கணம் தப்பாமல் அறிய ஆற்றல் வாய்ந்த கடவுளை முதலில் வாழ்த்துவாள். இச்செய்தி வாய்மொழிப்பாடல் ஆங்காங்கே புனைந்து பாடுதலை எடுத்துக்காட்டுகிறது. இவற்றால் தொழில்முறைக் கலைஞர்கள் இடம், பொருள், ஏவலுக்கு ஏற்றபடி தமக்கென்று பல முறைகளை வகுத்துக்கொண்டு அதனின்றும் மாறாமல், அதனைத் தொடர்ந்து கடைபிடித்து வந்தனர் என்பது புலப்படுகிறது.

**கலைஞர்களின் குடும்பச் சூழ்நிலை**

விழியாத கண்களை உடைய நாய்க்குட்டிகளை அவை பாலுண்ண முடியாமல் அதனால் ஏற்படும் வருத்தமும், பசித்துன்பத்தாலே ஏற்படும் வருத்தமும் பொறுக்க முடியாமல் தாயாகிய நாய்

படுத்திருக்கும் அடுக்களை, அதன் கூரையிலுள்ள கழிகள் விழுந்து விட்டன. பழஞ்சுவரிலோ கரையான் அப்பிக்கொண்டிருந்தன. அங்கு காளான்கள் பூத்து விளங்குகின்றன. அத்தகைய அடுக்களையில் பசியால் வருந்தும் மனைவி நகத்தால் கிள்ளிய குப்பைக்கீரையை உப்பில்லாது வேக வைத்தாள். வறுமை வருதல் இயல்பென்பதை உணராமல், புறஞ்சொல்லுவோர் காண்பதற்கு வெட்கி தலைவாசலை அடைந்தாள். பின்னர் தம் பெரிய சுற்றத்தோடு பகிர்ந்துண்டாள். இந்நிலையில் எத்தனை நாட்கள் கடத்திட முடியும்?

இவ்வாறு வறுமை கலைஞரை ஆற்றுப்படுத்தியது. ஓரிடத்தில் இராமல் வறுமை தீர்ப்பார் யார் என்றும் தமது கவிழ்ந்த பாத்திரத்தை உணவிட்டு நிமிர்த்தக்கூடியவர் யாரென்றும் தேடினர். மொத்தத்தில் தம்மைப் பாதுகாப்பவரைத் தேடி அலைந்தனர். கலைஞர் மிக்க பசியால் வாடினர். இவ்வாறு பசிக்கொடுமையும் பெரிதும் கலைஞர்களை வாட்டியது.

**கலைஞனின் படைத்தல் தொழில்**

இயற்கையையும் இலக்கியத்தையும் ரசிக்கத் தெரிந்தவன் படைப்பாளியாகிறான். படைத்தல் தொழிலாகும்போது கலைஞன் கடவுளுக்கு நிகரானவனாகிறான். இறைவனும் ஒரு கலைஞன் தான். அவன் இங்கு ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் தொழிலில் ஈடுபட்டதால் திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் கூறுகிறார். இறைவன் உலகில் வாழும் எல்லா உயிர்களும் மகிழும்படி படைத்தல், காத்தல், அளித்தல், அருளல், அழித்தல் ஆகிய ஐந்து தொழில்களையும் விளையாட்டாக நிகழத்தும் பேராற்றலை உடையவனாக இருப்பதால்,

“உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகல் ஞாயிறு கடல்கண் டாங்கு
ஓஅற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி
உறுநர்த்தாங்கிய மதின்உடை நோன்தாள்”1

என்கிறார். இதுபோன்ற அழகுக் கலைகளையும் ஐந்து பிரிவாகக் கூறுவர். அவை, கட்டடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை, காவியக்கலை என்பனவாகும். காவியக்லை என்பது மேற்கூறிய எல்லா கலைகளை விடவும் நுட்பமானது. காவிக்கலையின் பொருள் மனதால் அறிந்து அறிவால் இன்புற வேண்டும். இதை,

“அலகுக் கலைகளை விரும்பாத மனிதனை நாகரிகம் பெற்றவன் என்று கூற முடியாது. அவனை அறிவு நிரம்பாத விலங்கு என்றே கூறலாம்.”2 என்கிறார் மயிலை.சீனி.வேங்கடசாமி.

**காவியப் புலவர்கள்**

இன்று நாம் கவிஞன் என்று கூறுபவர்களை சங்க இலக்கியத்தில் காவியப் புலவராக உணர்கிறோம். பழங்காலத் தமிழர்கள் தமிழை மூன்று பிரிவாக ஆராய்ந்து வளர்த்தார்கள். ஆகவே, அது முத்தமிழ் என பெயர் பெற்றது. முத்தமிழ் என்பவை இயல், இசை, நாடகம் என்பவையாகும். இயற்றமிழ் என்பதில் காவியக்கலையும் அடங்கும்.

“இயல் இசையால் காதுக்கு மட்டும்தான் இன்பம். கூத்தால் கண்ணுக்கும் இன்பம்”3

என்று டி.கே.சண்முகம் எடுத்துரைக்கின்றார். எனவே, முத்தமிழ் கலை மூன்றையும் படைக்கக் கூடிய கலைஞன் காவியக்கலைஞனாக கருதப்படுகிறான்.

**ஆற்றுப்படைக் கலைஞர்கள்**

கூத்தரும் பாணரும் பொருநரும் இயல், இசை, நாடக அமைப்பின் கீழ் வருகின்றனர். புலவனின் படைப்பு பெரும்பாலும் இயற்கையைச் சார்ந்துதான் இருக்கின்றது. இயல் என்பதற்கு இயற்கை என்ற பொருளும் உண்டு. இது கூட இயல் என பெயர் வரக் காரணமாகயிருக்கலாம். சில படைப்புகள் படிப்பவருக்கு பெரும்மகிழ்ச்சியை அளிக்கின்றன. சிற்ப ஓவியங்கள் தருகின்ற இன்பத்திற்கு மேலாக கவிஞர்களின் சொல்லோவியங்கள் அளவற்ற இன்பத்தைத் தருகின்றன. சான்றாக, இங்கு கவிஞனின் உவமைத் திறத்தைக் காணலாம். பாலை பாடிய பெருங்கடுங்கோ சேர மன்னர் குலத்தவர். இவர் கலித்தொகையில் ஒரு பாடல் பாடியுள்ளார். அப்பாடலில் பாலை நிலத்தில் பட்டுப்போன ஒரு மரத்தை பல நிலைகளுக்கு உவமையாகக் கூறியுள்ளார். இதனை,

“வறியவன் இளமைப்போல் வாடிய சினையவாய்
சிறியவன் செல்வம்போல் சேர்ந்தார்க்கு நிழல்இன்றி
யார்கண்ணும் இகந்து செய்து இசைகெட்டான் இறுதிபோல்
வேரோடு மரம் வெம்ப விரிகதிர் தெறுதலின்
அலவுற்றுக் குடிகூவ ஆறின்றிப் பொருள் வெஃகிக்
கொலையஞ்சா வினைவராம் கோல்கோடி அவன் நிழல்
உலகுபோல உலறிய உயர்மர வெஞ்சுரம்”4 என்ற பாடல் அடி உணர்த்துகிறது.

**இசைக்கலையும் கலைஞர்களும்**

மனிதன் இன்று இயந்திரத்தனமாக இயங்கிக் கொண்டிருக்கிறான் என்பதை,

“மனித இனத்தின் சிறந்த சமூகப் பெறுமானங்கள் வர்த்தக நிறுவனத்தினால் காவு கொள்ளப்பட்டிருக்கும் நிலையில் அப்பெறுமானங்களைப் பாதுகாத்து உண்மையான மனிதனை உருவாக்குவதற்கு கலைஞர்களினால் சிறப்பாக பங்களிப்புச் செய்ய முடியும்.”5

என்று இலங்கை ஜனாதிபதி தனதுக் கருத்தைக் கூறியுள்ளார். கலைஞர்களால் நல்ல சமூகத்தினரை உருவாக்க முடியும் என்பது உணர்த்தப்படுகின்றது. இதனால் தான் மன்னர்கள் தவறு செய்யும்போது புலவர்கள் எடுத்துக் கூறும் நிலை இருந்துள்ளது என்பது நம் அனைவரும் அறிந்த செய்திதான். ஆற்றுப்படை நூலில் பரிசு பெற்ற புலவர்கள் தனக்குப் பின்னர் பரிசில் பெற இருக்கும் புலவருக்கு உதவும் வகையில் ஓர் அறிய அறச்செயலைச் செய்துள்ளனர். வழி தெரியாமல் வரும் புதியவர்களுக்கு வழி தெரியும் வகையில் ஊகம் புல்லை தாங்கள் செல்கின்ற வழியில் முடிந்து வைத்துள்ளனர். இச்செய்தியை

“பண்டு நற்கு அறியாப் புலம் பெயர் புதுவிர்
சந்து நீவிர் புல் முடித்து இடுமின்”6

இன்று நாம் மைல் கல் வைப்பதற்கும் நம் முன்னோர்கள் தான் காரணம் என்பதையும் மலைபடுகடாம் வழி அறிய முடிகிறது.

“செல்லும் தேஎத்து பெயர் மருங்கு அறிமார்
கல்எறிந்து எழுதிய நல்அரை மராஅத்த”7

இவ்வாறாக மலைபடுகடாம் நூலில் பல அறச்செயல்கள் அறிவுறுத்தப்படுகின்றது.

**கூத்தர்களின் வாழ்வியல்**

கூத்து நிகழ்த்துவோர் கூத்தர் எனப்பட்டனர். நாடகம், கூத்து என்றப் பெயரால் அழைக்கப்பட்டது என்று இலக்கிய நூல்கள் பல குறிப்பிடுகின்றன. சிறு வேறுபாடு பெற்ற

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

கலைஞராகத் திகழ்கின்றனர். கூத்து மட்டும் வாய்க்கப்பெற்றவர்கள் கூத்தர்கள் என்றும் இசையும் கூத்தும் முழுதும் தழுவி வாழ்ந்தவர்கள் பாணர் என்றும் அழைக்கப்பட்டனர். அவர்களின் பெருந்தொகுதியினை இரா.இளங்குமாரன் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்.

"பாணரும் இசைப்பாணரும் யாழ்ப்பாணரும் மண்டைப்
பதணருமெனப் பலராம் என்பார் நச்சினார்க்கினியார்
வாய்ப்பாட்டு இசைப்போர் இசைப்பாணர் எனப்படுவர்
நரம்புக்கருவி இசைப்போரர் மண்டைப்பாணர் எனப்படுவோர்"8

யாழ்ப்பாணர் பயன்படுத்தும் யாழைக் கொண்டு சிறுபாணர், பெரும்பாணர் என்று பிரிப்பர். இதனைச் சிறுபாணாற்றுப்படை,

"சீறியாழ் இடவயின் தழீஇ"9

என்றும், பெரும்பாணாற்றுப்படை,

"பேரியாழ் முறையுளிக் கழிப்பி"10

என்றும் ஆற்றுப்படை செய்திகள் குறிக்கின்றன. பல திறமைகளை தன்னுள் அடக்கியிருந்தாலும் இவர்கள் அடைந்தது வறுமையான வாழ்க்கையை மட்டுமே.

**கலைஞர்களின் வறுமைக்கான பின்புலம்**

கலைகள் மதிக்கப்பட்டது கலைஞர்கள் ஆதரிக்கப்பட்டனர் என்பதற்கு தகுந்த சான்றுகள் ஆற்றுப்படை இலக்கியம் ஆகும். மன்னர்களும் மக்களும் கலைஞர்களை ஆதரித்ததற்கான பல சான்றுகளை இலக்கியம் வளம் குறையாமல் இயம்பியிருக்கின்றது. வள்ளல்கள் பயனளிக்காது கொடையளிக்கக் கூடியவர்களாக இருந்தனர். பேகன் மயிலுக்குப் போர்வை தந்தான் அவன் கொடை மறுபிறப்பைப் கருதியது அன்று பிறரது வறுமையை நோக்கி துன்பத்தை நோக்கியதாகும்.

"எத்துனை ஆயினும் ஈதல் நன்றுஎன
மறுமை நோக்கின்றோ அன்றே
பிறர்வறுமை நோக்கின்று அவன்கை வண்மையே"11

புலவர்கள் பழுத்த மரத்தைத் தேடிச் செல்லும் பறவைப் போல தம்மை ஆதரிக்கும் புரவலரை நாடிச் செல்லும் நாடோடி வாழ்க்கையினராக இருந்தனர்.

"பழுமரம் தேரும் பறவைபோலக்
கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்"12

வறுமை என்பது மிகப்பெரிய கொடிய நோய். ஏழ்மைப் போல மிகுந்த துன்பம் தருவது எதுவென்றால் ஏழ்மைதான். வறுமைக்கு ஒப்பாகுவது வறுமையே. அதாவது எல்லாக் கொடுமைகளிலும் மிக்கக் கொடுமை வறுமை என்பதைத்தான் வள்ளுவர்,

"இன்மையின் இன்னா தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது"13

என்கின்றது. மேலும், மன்னன் என்பவன் 'நாட்டில் வாழும் மக்களைப் புறக்கணியாமல் அவர்களைத் தழுவி ஆட்சி செய்யும் அரசனது வழியை மக்களும் உறுதியுடன் பின்பற்றி நடப்பார்கள். குடிகளை இனிய சொற்களால் இதமாகப் பேசி மகிழ்வித்தலும் அவர்களுக்குத் தளர்ச்சி ஏற்படும்போது வேண்டிய உதவிகளைச் செய்தலும் அரசின் தலையாய கடமையாகும். இதனை வள்ளுவம்,

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்

அடிதழீஇ நிற்கும் உலகு"14.

என்கின்றது. 'பசி வந்தால் பத்தும் பறந்து போகும்' என்பது பழமொழி. வறுமை கலந்த பசி அறிவை அழித்து விடும். அறிவை அழிக்கக் கூடிய பசியை நம் மன்னர்கள் அழித்து விடுவார்கள். புலவர்கள் நல்லியங்கோடனை சந்தித்தால் பசி முதலிய துன்பங்கள் நீங்கும் என்பதை கலித்தொகை எடுத்துரைக்கின்றது.

"ஆழிபசி வருத்தம் வீட"15 என்கிறார் நத்தத்தனார்.

ஔவையார் புறநானூற்றில் அதியமான் மீது கொண்ட நட்பின் அன்பை வெளிப்படுத்தும் பொருட்டு உண்மை நிலையை உணர்த்துகிறார். மன்னன் சிறிய அளவு சோறு கிடைத்தால் பலருக்கு பகிர்ந்து அளிப்பான். பெரிய அளவு சோறு கிடைத்ததால் பலரோடு உண்பான் என்ற செய்தியைக் கூறி, இத்தகைய சிறப்பு பொருந்திய அதியமான் இறந்து விட்டதால் அருமையுடைய பாணர்களின் அகன்ற பாத்திரத்தில் துளையுண்டாகியது. இரப்பவர் கைகளும் தளர்ந்து சோர்ந்தது என்கின்றார்.

"சிறுசோற்றானும் நனிபல கலத்தன் மன்னே

பெருஞ்சோற்றானும் நனிபல கலத்தன் மன்னே

அருந்தலை இரும்பாணர் அகல மண்டைக் துளை உரிஇ

இரப்போர் கையுளும் போகிப்"16

அதியமான் நெடுமான் அஞ்சியை அடுத்து வள்ளல் தன்மை உள்ள புலவர்கள் யாரும் இல்லை என்பதை ஔவையார் உணர்த்துகின்றார். பொருநர் தொன்றுதொட்டு பசியும் வறுமையும் கொண்டவர். இதனை பொருநராற்றுப்படையில்,

"ஆடுபசியுழந்த நின் இரும்பே ரொக்கலொடு நீடுபசி"17

என்ற அடி உணத்துகின்றது. இத்தகைய சமூக சூழ்நிலையில் திருவிழாக் காலங்களில் இசைக் கச்சேரி நிகழ்ச்சிகள் நடைபெறுவது போல சங்க காலத்திலும் கலைஞர்கள் விழாக்கள் நடைபெறும் பேரூர்களில் சென்று பாடியுள்ளனர். ஓர் ஊரில் விழா முடிந்ததும் அங்கேயே தங்கியிராமல் விழா நடக்கும் அடுத்த ஊரை நாடிச்செல்லும் இயல்பினராக இருந்துள்ளனர். இதனை,

"சாறுகழி வழிநாட சோறு நசையுறாது

வேற புல முன்னிய விரகறி பொருந"18

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

**முடிவுரை**

சங்க இலக்கிய கலைஞர்களின் வாழ்க்கை சமூகப் பின்புலத்தை அறியும் போது அவர்களிடத்தில் பொருளுக்காக வாழ்க்கை என்ற போக்கு இருந்தாலும் பொருளே வாழ்க்கை என்ற எண்ணம் காணப்படவில்லை. வாழ்க்கை இயந்திரத்தனமாகவும் போலியானதாகவும் காணப்படவில்லை. இயல்பானதாகவும் எளிமையானதாகவும் தனக்குக் கிடைத்ததை சக கலைஞர்களும் பகிர்ந்துக் கொடுக்கும் தன்மையுடையதாக காணப்படுகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. திருமுருகாற்றுப்படை, பா. வரி.1-4
2. நுண்கலைகள், ப.6
3. பாக்கியமேரி முனைவர், வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, ப.434
4. கலித்தொகை, பா.10.1-7
5. றறற.புழழபடந.உழஅஇ சமூகப்பின்புலம்.
6. மலைபடுகடாம், பா.வரி.392-393
7. மேலது, பா.வரி.394-395
8. செம்மொழி இலக்கியங்களில் கலைகளும் கலைஞர்களும், ப.36.
9. சிறுபாணாற்றுப்படை, பா.35.
10. பெரும்பாணாற்றுப்படை,பா.462
11. புறம், பா.141
12. பெரும்பாணாற்றுப்படை, பா.வரி.19-20.
13. குறள்.1041
14. மேலது,544.
15. சிறுபாணாற்றுப்படை, பா.141
16. புறம், பா.வரி.3-4,10-11
17. பொருநராற்றுப்படை, பா. வரி.61-62.
18. மேலது, பா.வரி.50-53